**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை**

**NHOP.No.9 /2024**

Date:12.03.2026 PW.1 ( இளங்கோ)

**2 மற்றும் 3 எதிர்கோருரிமையாளர்கள் தரப்பு குறுக்குவிசாரணை :**

நான் சிவகங்கை தேவஸ்தானத்தின் மேலாளர் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக மேலாளராக உள்ளேன் என்றால் சுமார் 20 வருடங்களாக மேலாளராக பணியாற்றி வருகிறேன். எனது நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு சொத்துக்கள் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தாலுகா கொட்டக்குடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் இந்த வழக்கின் சொத்து சிவகங்கை சமஸ்தானம் தேவாஸ்தானத்திற்குட்பட்ட ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து சிவகங்கை சமஸ்தானம் தேவாஸ்தானத்திற்குட்பட்ட ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று காட்டக்கூடிய உரிமை ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ம.சா.ஆ.1 பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 பட்டாவில் Trustee யார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பார்வதி அம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவிலில் மண்டகப்படியை பார்வதி அம்மாள் கவனித்து வந்ததால் Trustee என அவர் பெயர் போடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆவணத்தில் மண்டகப்படி என்று போடப்பட்டுள்ளதா என்றால் மடப்பள்ளி என்று தவறுதலாக போடப்பட்டுள்ளது. மடப்பள்ளி என்பது பூஜையின் போது சாமிக்கு படைக்கக்கூடிய நெய்வேத்தியங்களை தயாரிக்கக்கூடிய சமயல்கூடம் என்றால் சரிதான். மண்டகப்படி என்பது சாமி எழுந்தருளும் போது செய்யக்கூடிய மரியாதை என்றால் சரிதான். வழக்கச் சொத்தை சிவகங்கை சமஸ்தானம் எத்தனை வருடங்களாக நிர்வகித்து வருகிறார்கள் என்றால் சுமார் 100 வருடங்களாக நிர்வகித்து வருகிறார்கள். 100 வருடங்களாக வழக்குச் சொத்தை சிவகங்கை சமஸ்தானம் நிர்வகித்து வருகிறது என காட்ட ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் வழக்குச் சொத்தை மற்றும் மண்டகப்படியினை நிர்வகிக்க எந்த ஒரு Trustee யையும் இது நாள் வரை நியமிக்கவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 2 வது பாராவின் இறுதியில் "முதல் நாள் மண்டகபடிக்கு நல்ல

நோக்கத்துடன் கொட்டக்குடி கிராமம் புல எண். 119/2 நஞ்சை விஸ்தீரணம் 0.56.50 கொண்ட நஞ்சை நிலத்தினை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவில் மண்டகப்படிக்காக தானமாக வழங்கப்பட்டு தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு தானாமாக வழுங்கப்பட்டதாக சொல்லியுள்ளதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இங்கு காட்டப்படும் 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள 25.05.1900ம் தேதியிட்ட ஆவணம் தான் நான் குறிப்பிட்டுள்ள தான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி 25.05.1900ம் தேதியிட்ட ஆவணம் **2ம் எதிர் கோருரிமையர் சான்றாவணம் -1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தான ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இங்கு காட்டப்படும் தான ஆவணமானது சிவகங்கையில் இருக்கும் ராமய்யர் புத்திரன் பிராமண ஜாதி விவசாய ஜீவனம் சுந்தரமய்யனாகிய சுந்தர சாஸ்திரிகளுக்கு தருமாகனம் கொட்டக்குடி கிராம மகாஜனங்களில் அடியில் கையெழுத்து வைத்திருக்கிற நாங்கள் எழுதிக்கொடுதத சாஸ்வதக்கவுல் படைப்பு என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிர்கோருரிமையாளர்கள் தரப்பு குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:27:47 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை